ஆகிவிடும். ஏற்கெனவே கரும்பை அரைத்துவிட்டவர்கள், இப்போது போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கரும்பை அரைக்காமல் வெளியில் இருப்பவர்கள் அப்படிச் செய்யவில்லை. எனக்கு அரை ஏக்கர் நிலம் கூட தர்மபுரியில் இல்லை. நியாயமான விலையை எல்லா விவசாயிக்கும் கொடுக்கிறோம். இந்த ஆண்டு அதிக விலை கொடுத்தால், அடுத்த ஆண்டு சர்க்கரை ஆலையை நடத்த வேண்டுமா, வேண்டாமா? எல்லோரையும் சமமாகத்தான் வைத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், கரும்பாலையில் இப்போது நியாயமான விலைக்கே கரும்பை எடுக்கிறார்கள். அதில் அவர்கள் பங்குத் தொகை கேட்கிறார்கள். அவ்வளவுதான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்று மாலை 5 மணிக்கு மேதகு ஆளுநர் அவர்கள், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு விருந்து வைத்து அழைத்திருக்கிறார்கள். ஆகவே அதில் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மேலவை மீண்டும் 10—5—1986 சனிக்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-32)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

184. மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

185. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

1986 மே 3]

186. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ் நாடு துறைமுகத் துறை பற்றிய சாதனை விளக்க அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

187. எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்க ஆய்வுரை, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

188. பாசனம் மற்றும் கட்டிடங்கள் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

189. பொதுப்பணித்துறை (கட்டிடப்பிரிவு) 1985-86 ஆம் ஆண்டின் பணிகள் பற்றிய ஆய்வுக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

190. செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கைக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

191. பொது நிறுவனங்கள் குழுவில் முப்பத்தி ஒன்றாவது அறிக்கை 1985-86 (ஆங்கிலம் மற்றும் தமிழ்).

192. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை, 1985-86 (தமிழ்).

193. பொது கணக்குக் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

194. பொது கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

195. பொது கணக்குக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை 1985-86 (தமிழ்).

196. தொழில் கொள்கையும் திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

197. 1986-87 ஆம் ஆண்டிற்கான ஊரக மற்றும் சிறு தொழில்கள் குறித்த சாதனைத் திட்டம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).